செ.வெ.எண்: 213/2020 நாள்: 25.04.2020

**இந்தியாவில் முதன் முறையாக திருவண்ணாமலை மாவட்டத்தில் கொரோனா ஊரடங்கினை பயனுள்ளதாக்க முதல் கட்டமாக நடத்தப்பட்ட சிறப்பு ஆன்லைன் தேர்வில் 21,041 பள்ளி மாணவர்கள் பங்கேற்பு...**

திருவண்ணாமலை மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் அறிவுறுத்தலின்படி, கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்காக கடந்த 24.03.2020 மாலை 06.00 மணி முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கொரோனா ஊரடங்கு காலத்தில் பள்ளிகள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரடங்கினால் தங்கள் வீடுகளில் இருக்கும் பள்ளி மாணவர்கள் பயனுள்ளதாக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக சிறப்பு ஆன்லைன் தேர்வுகள் கடந்த 29.04.2020 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடத்தப்பட்டது. இத்தேர்வில் மாவட்ட முழுவதும் 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மொத்தம் 21,041 பள்ளி மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கான ஆன்லைன் தேர்வு மூன்று அடுக்கு தேர்வு முறையாக நடத்தப்படுகிறது. முதல் கட்ட தேர்வு 100 மதிப்பெண்கள் அடிப்படையில் பள்ளி பாடங்கள் தொடர்பான கேள்விகள் கொண்டு கடந்த 29.04.2020 அன்று நடத்தப்பட்டது. இத்தேர்வில் மாவட்டம் முழுவதும் 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் 21,041 பள்ளி மாணவர்கள் பங்கேறார்கள். தற்போது, இரண்டாம் கட்ட தேர்வு வரும் 13.05.2020 புதன்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை பள்ளி பாடங்கள் தொடர்பான கேள்விகள் கொண்டு நடத்தப்படுகிறது, மேலும், இறுதி கட்ட தேர்வுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும். முதல் கட்ட தேர்வில் 75% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றுள்ள 3029 பள்ளி மாணவர்கள் நேரடியாக இறுதி கட்ட தேர்வுக்கு தகுதி செய்யப்பட்டுள்ளார்கள். இறுதி கட்ட ஆன்லைன் தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் https://tiruvannamalai.nic.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது, இதனை முதல் கட்ட தேர்வில் பயன்படுத்திய கைபேசி எண், கடவுச்சொல் பயன்படுத்தி தெரிந்துக் கொள்ளலாம். இறுதி கட்ட ஆன்லைன் தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள், இரண்டாம் கட்ட தேர்வில் பங்கேற்க தேவையில்லை.

முதல் கட்ட ஆன்லைன் தேர்வில் பங்கேற்காதவர்கள், பதிவு செய்யும் போதும், மாதிரி தேர்வு மற்றும் முதன்மை தேர்வில் பங்கேற்கும் போது தொழில்நுட்ப கோளாறினால் பாதியில் தடைபட்டவர்கள், 75% கீழ் மதிப்பெண்கள் பெற்றவர்கள் வரும் 13.05.2020 புதன்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெறும் இரண்டாம் கட்ட ஆன்லைன் தேர்வில் கலந்து கொண்டு, இறுதி தேர்வுக்கு தகுதி பெறுவதற்கு

வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மேலும், முதல் கட்ட ஆன்லைன் தேர்வில் பதிவு செய்த பள்ளி மாணவர்கள், இரண்டாம் கட்ட ஆன்லைன் தேர்வில் பங்கேற்க ஏற்கனவே பயன்படுத்திய கைபேசி எண் (User ID) மற்றும் கடவுச்சொல் (Password) பயன்படுத்திக் கொள்ளலாம். முதல் கட்ட ஆன்லைன் தேர்வில் பயன்படுத்திய கடவுச்சொல்லை மறந்தாலும் மீண்டும் வேறு கடவுச்சொல் மாற்றிக் கொள்வதற்கான (Reset Password) வசதி செய்யப்பட்டுள்ளது. முதல் கட்ட ஆன்லைன் தேர்வில் பங்கேற்காதவர்கள், இரண்டாம் கட்ட தேர்வுக்கு பதிவு செய்து நேரடியாக தேர்வு எழுதலாம். இரண்டாம் கட்ட தேர்வு 13.05.2020 புதன்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெறும். ஆன்லைன் தேர்வு எழுத விரும்பும் பள்ளி மாணவர்கள் மேற்கண்ட நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் தேர்வில் பங்கேற்கலாம். திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த பள்ளி மாணவர்கள் மட்டும் ஆன்லைன் தேர்வில் பங்கேற்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 6-ம் முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் இரண்டாம் கட்ட ஆன்லைன் தேர்வு ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனி கேள்விகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் கேட்கப்படும். இத்தேர்வினை https://tiruvannamalai.nic.in என்ற இணையதளத்தில் மாணவர்களுக்கான ஆன்லைன் தேர்வு (Students Online Test) என்ற இணைப்பில் (https://164.100.167.196:8080/studentstest) சென்று பங்கேற்கலாம். இரண்டாம் கட்ட ஆன்லைன் தேர்வில் அனைத்து பாடப்பிரிவிலும் 50 கேள்விகள் கேட்கப்படும், ஒவ்வொரு கேள்விக்கும் 2 மதிப்பெண்கள் வழங்கப்படும். ஆன்லைன் தேர்வில் பங்கேற்கும் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் வெவ்வேறு கேள்விகள் கேட்கப்படும். ஆன்லைன் தேர்வு ஒரு மணி நேரம் நடைபெறும், தேர்வின் முடிவுகள் உடனடியாக தெரிந்து கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு 93454 64414 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டம் நிர்வாகம், பள்ளிக் கல்வித் துறை மற்றும் தேசிய தகவலியல் மையம் மூலமாக கொரோனா ஊரடங்கு காலத்தில் பள்ளி மாணவர்கள் பயனுள்ளதாக்க இந்தியாவிலேயே முதல் முறையாக ஆன்லைன் தேர்வு நடத்தப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்கள் ஆன்லைன் தேர்வில் பங்கேற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**